## முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு வரவேற்புரை! விவசாயிகளை வஞ்சிக்கும்

## த.வெ.க. அரசைக் கண்டித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பினையேற்று

# தஞ்சையில் - உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நாளை ஆர்ப்பாட்டம்!

## தோழமைக் கட்சியினர் – கழக முன்னணியினர் – விவசாய சங்கத்தினர் கண்டன முழக்கமிடுகின்றனர்!

**தஞ்சை, ஆக. 2-**

**விவசாய கடன் முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டியும், மேகதாது அணை கட்டுவதை தடுக்க தவறிய த.வெ.க அரசை கண்டித்தும், டெல்டா மாவட்டங்களை வறட்சி மாவட்டங்களாக அறிவிக்க வேண்டியும் த.வெ.க. அரசைக் கண்டித்து திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நாளை (03.08.2026 - திங்கட்கிழமை) காலை 10.00 மணியளவில் பனகல் கட்டிடம் அருகில், தஞ்சாவூரில் நடைபெறுகிறது.**

த.வெ.க. அரசைக் கண்டித்து நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில் கழக முதன்மைச் செயலாளர், சட்டமன்ற எதிர்க்கட்சி துணைத் தலைவர் கே.என்.நேரு அவர்கள் வரவேற்புரையாற்றுகிறார்.

ஆர்ப்பாட்டத்திற்கு சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமை வகிக்கிறார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் தோழமைக்கட்சித் தலைவர்கள் எம்.எச். ஜவாஹிருல்லா, மு.தமீமுன் அன்சாரி, நெல்லை முபாரக்,

இரா.ஜெயக்குமார், பி.சிவநேசன் தர்ம.சரவணன், ஏ.ஆரோக்கியசாமி ஆகியோர் கண்டன உரையாற்றுகின்றனர்.



இந்த ஆர்ப்பாட்டத்தில் கழக முன்னணியினர் திருச்சி என்.சிவா, எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், எஸ்.கல்யாணசுந்தரம், எஸ்.ரகுபதி, அன்பில் மகேஸ் பொய்யாமொழி,

கோவி.செழியன், டி.ஆர்.பி. ராஜா, ஆர்.வைத்திலிங்கம், செ.இராமலிங்கம், எஸ்.எஸ்.சிவசங்கர், சிவ. வீ.மெய்யநாதன், சி.வெ.கணேசன், ஏ.கே.எஸ்.விஜயன், அன்னியூர் ஏ.சிவா, உ.மதிவாணன்,

எம்.பி.க்கள் ச.முரசொலி, கே.என். அருண்நேரு, கவிஞர் சல்மா,

மாவட்டச் செயலாளர்கள் பூண்டி கே.கலைவாணன், சாக்கோட்டை க.அன்பழகன், காடுவெட்டி ந.தியாகராஜன், க.வைரமணி, நிவேதா எம்.முருகன், என்.கௌதமன், கே.கே. செல்லபாண்டியன், டி.பழனிவேல், முன்னாள் இன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள் கா.அண்ணாதுரை, என்.அசோக்குமார், ஏனாதி ப.பால சுப்பிரமணியன், சீ.கதிரவன், எம்.செந்தில்செல்வன், வை.முத்து ராஜா, எம்.ரெங்கசாமி, து.செல்வம், எம். இராமச்சந்திரன், டி.கே.ஜி.நீலமேகம், கே.டி.மகேஷ்கிருஷ்ணசாமி, சி.இறைவன், த.காரல்மார்க்ஸ், குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி, சண். இராமநாதன், டாக்டர்.அஞ்சுகம்பூபதி, சுப.தமிழழகன், ஆடுதுறை மு.உத்திராபதி, இராம.விஜயன், பழஞ்சூர் கே.செல்வம், வீ.ஜெயபிரகாஷ், கார்த்திகேயன்வேலுச்சாமி,

விவசாய சங்க நிர்வாகிகள் காவிரி வி.தனபால் , கே.வி.இளங்கீரன், பூரா.விஸ்வநாதன், சுக்கரை ஆர்.சுகுமாறன், பி.கே.தெய்வசிகாமணி, என்.பழனியப்பன்,

கோபி.கணேசன், ஜி.எஸ்.தனபதி, பி.ராமசாமி, பி.கோவிந்தராஜ், கே.எஸ்.முஹமது இப்ராஹீம்,

விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி நிர்வாகிகள் சு.சின்னையன், பி.ரவிச்சந்திரன், வை.வினோத்குமார், கரம்பயம் ஏ.ஆனந்த், க.சுப்பிரமணியன், க.அன்பழகன், எஸ்.டி.சேது, அடைக்கலம் செல்லமுத்து, என். கருப்பையா, கோ.ரமேஷ், ஏ.ஜெகதீசன், கோ.வி.நாகராஜன் பி.எம்.கே. குறிச்சிமன்னன், எஸ்.பால்ராஜ், ஆர்.துரைராஜ், கொண்டல் இரா. முருகன், திருமணஞ்சேரி இரா. மனோகரன், க.தர்மதுரை, என். ஆர்.ராமதுரை, பொன்.பாரிவள்ளள், சி.அரங்கநாயகம், ஆர்.சிவக்குமார், ஏ.சேகர், பூ.மதியழகன், பொன்.பன்னீர், ம.ராமசாமி உள்ளிட்ட விவசாய பெருங்குடி மக்கள், கூட்டணி கட்சி நிர்வாகிகள், விவசாய சங்க பிரதிநிதிகள், முன்னாள் அமைச்சர்கள், முன்னாள், இன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பேரூர், வட்ட, கிளை கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், முன்னாள், இன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் மற்றும் கழக தோழர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டு கண்டன முழக்கமிடுகின்றனர்.

---

### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் மாலை அணிவிக்கிறார்! விடுதலை வீரர்

## தீரன் சின்னமலை திருவுருவச் சிலைக்கு மரியாதை!

### மாவட்டச் செயலாளர் மா.சுப்பிரமணியன் வேண்டுகோள்!

சென்னை, ஆக.2

கிண்டியில் விடுதலைப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை சிலைக்கு கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார். சென்னை தெற்கு மாவட்ட தி.மு.கழகத்தினர் திரளாக பங்கேற்று சிறப்பான வரவேற்பு அளித்திடுவீர் என மாவட்ட கழக செயலாளர் மா.சுப்பிரமணியன் அழைப்பு விடுத்துள்ளார்.

சென்னை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் மா.சுப்பிரமணியன் விடுத்துள்ள அழைப்பு வருமாறு:-

விடுதலைப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை, ஆங்கிலேயரின் நிபந்தனை களை ஏற்க மறுத்து 1805 ஆம் ஆண்டு ஜூலை 31, அன்று தனது சகோதரர்களுடன் சங்ககிரி கோட்டையில் தூக்கிலிடப்பட்டு வீரமரணம் அடைந்தார். ஆகஸ்டு 3 அன்று உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

அவரது தியாக உணர்வை போற்றும் விதமாக ஒவ்வொரு ஆண்டும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் அவரது சிலைக்கு மலர் தூவி மாலை அணிவித்து மரியாதை செலுத்துவார். அதேபோல் இந்த ஆண்டு 221 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு நாளை (3-8-26) திங்கள் கிழமை காலை 10 மணி அளவில் சென்னை தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட கிண்டியில் அமைந்துள்ள விடுதலைப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்.

ஆகவே இந்த சிறப்பு வாய்ந்த நிகழ்வில் சென்னை தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், மேனாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாநிலக் கழக நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி கழக செயலாளர்கள், ஒன்றிய கழக செயலாளர்கள், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் மற்றும் மாவட்டத் துணை அமைப்பாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள், அனைத்து அணிகளின் மாவட்ட, பகுதி, ஒன்றிய அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், கழக செயல் வீரர்கள் முதலானோர் திரளாக பங்கேற்று கழகத் தலைவருக்கு உற்சாகமாக வரவேற்பு நல்கிட அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் மா.சுப்பிரமணியன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

---



விழுப்புரம் கலங்கரை விளக்கம் அறக்கட்டளை சார்பில் தொடர் ஓட்டம் வீரர் இ.இரனில்நாத் (விழுப்புரம் முதல் கன்னியாகுமரி ) ( கன்னியாகுமரி முதல் சென்னை ) வரை (1250 KM ) பெண்கள் பாதுகாப்பு மற்றும் புற்றுநோய் ஒழிப்பு விழிப்புணர்வு தொடர் ஓட்டத்தை கழக துணைப் பொதுச்செயலாளர் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்கள் நேற்று கொடியசைத்து துவக்கி வைத்தார். மாவட்ட துணைச் செயலாளர் தயா.இளந்திரையன், மாநில தமிழ்நாடு அரசு ஊழியர் அனைத்து வகை மாற்றுத்திறனாளிகள் சங்க தலைவர் வ. இருசன், நகர பொருளாளர் NN.இளங்கோ, தொ.மு.ச நிர்வாக பணியாளார் சங்க செயலாளர் வாலிபால் மணி, மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் கேபிள் டிவி சுரேஷ்பாபு, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் பார்த்தசாரதி, மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் ரமேஷ், வார்டு செயலாளர் பிரபு, ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் பூக்கடை சுந்தர், மு.நகர விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் சந்தோஷ், நகர பொறியாளர் அணி துணை அமைப்பாளர் சி.வீரமணி, நகர தகவல் தொழில்நுட்ப அணி அபுபக்கர், ராஜபாண்டியன் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

---

### த.வெ.க. அரசின் மின் கட்டணக் கொள்ளை : சத்தியமங்கலத்தில்

## மின்வாரிய அலுவலகத்தை முற்றுகையிட்ட பொதுமக்கள்!

*ஈரோடு, ஆக.2-*

*த.வெ.க. அரசின் மின் கட்டண கொள்ளையால் ஷாக் ஆகும் மக்கள். கடந்த முறை ரூ.841 இந்த மாதம் ரூ.6,166 மின் கட்டணத்தால் மின்வாரிய அலுவலகத்தை முற்றுகையிட்டு பொதுமக்கள் வாக்குவாதம் செய்தனர்.*

*ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் அருகே, மின் கட்டணம் பல மடங்கு அதிகரித்ததால், அதிர்ச்சி அடைந்த பொதுமக்கள், மின்வாரிய அலுவலகத்தை முற்றுகையிட்டு அதிகாரிகளிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.*

*சத்தியமங்கலம் நகர் பகுதியில் உள்ள வடக்குபேட்டையில் நூற்றுக்கும் மேற்பட்ட வீடுகளுக்கு கடந்த முறை வசூலிக்கப்பட்ட மின் கட்டணத்தைவிட தற்போது பல மடங்கு அதிகரித்ததால் பொதுமக்கள் அதிர்ச்சி அடைந்தனர்.*

*மின் கட்டணம் எவ்வாறு அதிகரித்தது என்பது குறித்து கேட்பதற்காக மின்வாரிய அலுவலகத்தை முற்றுகையிட்ட பொதுமக்கள், இலவச மின்சாரமே வேண்டாமே என்றும், கடந்த முறை 841 ரூபாய் செலுத்தியதாகவும், இந்த முறை எப்போதும் போலவே மின்சாரம் பயன்படுத்திய போதிலும், 6 ஆயிரத்து 166 ரூபாய் மின் கட்டணம் வந்ததன் காரணத்தைக் கேட்டு அதிகாரிகளிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.*

*மின் கட்டணம் அதிகமாக உள்ள வீடுகளில் மீண்டும் ஆய்வு செய்து கணக்கீடு மேற்கொள்ளப்படும் என தெரிவித்ததை அடுத்து, பொதுமக்கள் கலைந்து சென்றனர்.*

---

### சோபா மாடல் அரசின் வஞ்சகப் போக்கிற்கு கண்டனம்!

## காஞ்சிபுரத்தில் ஆக.7 - முத்தமிழறிஞர் கலைஞர் 8ஆம் ஆண்டு அமைதிப்பேரணி - சிலைக்கு மாலை அணிவிப்பு!

### காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம் – மாவட்டச் செயலாளர் க.சுந்தர் அறிக்கை!

*காஞ்சிபுரம், ஆக.2-*

*காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம் காஞ்சிபுரம் மேட்டு தெரு, கே.டி.எஸ்.மணி, மாளிகையில் அமைந்துள்ள கலைஞர் நூற்றாண்டு அரங்கத்தில், 1.8.2026 சனிக்கிழமை காலை மாவட்டக் கழக அவைத் தலைவர் ச.இனிய அரசு தலைமையில் நடைபெற்றது.*

*தொடக்கத்தில் மாவட்டக் கழகக் செயலாளர் க.சுந்தர் கலந்து கொண்டு அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.*




*மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் ஒ.எஸ்.தினகரன், க.செல்வம் எம்.பி., திருமதி கு.மலர்விழி, பொருளாளர் கே.ஆறுமுகம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி.எழிலரசன், மாநில இளைஞர்அணி துணை செயலாளர் ப.அப்துல் மாலிக், மாநகர செயலாளர் சி.கே.வி.தமிழ்ச் செல்வன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் எம்.எஸ்.சுகுமார், எஸ். ஆர்.அப்பாதுரை, மாநில வர்த்தக அணி துணைச்செயலாளர் வி.எஸ்.ராமகிருஷ்ணன், மாநில இலக்கிய அணி ஆர்.தசரான், காஞ்சிபுரம் மேயர் திருமதி மகாலட்சிமி யுவராஜ்,*

*பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.சிகாமணி, எஸ்.கே.வி.சீனிவர்சன், எஸ்.உசேன், பொன். சசிகுமார், நகர செயலாளர் கு.குமார், ஒன்றிய செயலாளர்கள் கெ.ஞானசேகரன், பி.எம்.குமார், க.குமணன், டி.குமார், பி.சேகர், பி.எம்.பாபு, பொன்.சிவக்குமார், சத்திய சாய் எம்.எஸ்.பாபு. கே.கண்ணன், ஜி.தம்பு, டி.வி.கோலகுண்ணன்., ஏழுமலை,சிற்றரசு, சரவன்னன்,ஒன்றிய குழு பெருந்தலைவர் ஆர். கே.தேவேந்திரன்,*

*காஞ்சிபுரம் மாநகர பகுதி செயலாளர்கள் எஸ். சந்துரு, கே.திலகர், அ.தசரதன், சு.வெங்கடேசன்,*

*காஞ்சிபுரம் மாநரகர நிர்வாகிகள் கே.ஏ.செங்குட்டுவன், ஏ.எஸ்.முத்து செல்வம், வ.ஜெகந்நாதன், கே.சுப்பரயன்,திருமதி நிர்மலா,*

*பேருர் கழக செயலாளர் என்.பாண்டியன், என்.எஸ்.பாரிவள்ளல், மோகன்தாஸ், சுந்தரமூர்த்தி,*

*மாவட்ட அணிகளின் அமைப்புளர்கள் அ. யுவராஜ், ஆ.செல்வி, நாத்திகம் நாகராஜன், வ.மலர்வண்ணன், பா.காத்திகேயன், டி.ஜெய்கணேஷ், கே.ஏ. இளைங்கோன்,*

*மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் டி.சஞ்சய்காந்தி, எம். அருள், முருகன், ஆண்டோ சிரில்ராஜ் உள்ளிட்ட மற்றும் பலர் கலந்து கொண்டனர்.*

*முடிவில் மாவட்ட செயலாளர் க.சுந்தர் தீர்மானங்களை விளக்கி பேசினார்.*

*அத் தீர்மானங்கள் விவரம் வருமாறு:*

*கடந்த 2021 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சி அமைந்ததும் மகளிர் இலவச விடியல் பயணம், புதுமைபெண் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டம், மக்களைத் தேடி மருத்துவம், காலை உணவுத் திட்டம், மற்றும் மகளிர் நலம், கல்வி மற்றும் மருத்துவம் ஆகிய துறைகளில் பல முக்கிய திட்டங்கள் நிறைவேற்றப்பட்டது, ஆனால் தற்போதைய சேபா மாடல் அரசு தி.மு.க. அரசின் திட்டங்களுக்கு பெயர் மாற்றம் செய்து, ஸ்டிக்கர் ஒட்டும் வேலையை தான் செய்து வருகிறது.*

*இந்த சோபா மாடல் அரசு அமைந்ததும் 200 யுனிட் வரை இலவச மின்சாரம் விவசாய கடன் தள்ளுபடி என குழப்பமான அறிவிப்புகளை செய்து பொதுமக்கள், விவசாயிகள் யாரும் மகிழ்ச்சியாக இல்லை ,அரசு வழக்கறிஞர்கள் நியமனத்துக்கு லஞ்சம், மாநிலத்தில் குற்ற செயல்கள் மற்றும் கொலைகள் அதிகரித்து உள்ளது. லாக் அப் மரணங்கள், அரசின் நிதி மேலாண்மை மற்றும் நிர்வாக செயல்பாடுகள் மீது அதிருப்தி, தேர்தல் வாக்குறுதிகள்நிறைவேற்றாது பொது மக்களுக்கு பாதுபாப்பின்னை, காவல் துறை சுதந்திரமாக செயல் படவில்லை, அனைத்து துறைகளும் செயலழின்து விட்டது. போதாதற்கு இந்த அரசை விமர்சிப்பவர்கள் மற்றும் தி.மு.க. கழகத்தினர் மீது பொய் வழக்கு என வாக்குறுதிகளை நிறைவேற்றாத இந்த சேபா மாடல் அரசை காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. கழகம் வன்கையாக கண்டிக்கிறது.*

*நவீன தமிழ்நாட்டின் சிற்பியும் தமிழூக்காவும் தமிழ் மக்களுக்காகவும் தன் வாழ்வையே அர்ப்பணித்தவருமான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நான் ஆகஸ்ட் 7ஆம் தேதி அன்று காஞ்சிப்புரம் மற்றும் உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதியைச் சாந்த கழகத் தோழர்கள் நிர்வாகிகள் காஞ்சிபுரம் பெரியார் தூண் அருகில் காலை 7.00 மணி அளவில் திரண்டு ஊர்வலமாக சென்று கலைஞர் சிலைக்கு மாலை அணிவித்தும், அதேபோல மதுராந்தகம் மற்றும் செய்யூர் சட்டமன்றத் தொகுதியைச் சார்ந்த கழக நிர்வாகிகள் காலை 9 மணி அளவில் மதுராந்தகம் கலைஞர் சிலைக்கு மாலை அணிவிக்கும் நிகழ்ச்சியிலும் பங்கேற்பதென தீர்மானிக்கிறது.*

*இவ்வாறு தீர்மானங்கள் நினைவேற்றப்பட்டன்.*